திரு. ஜி. பழனிசாமி: குறைந்தபட்சமாகவாவது, அவர்களை எல்லாம் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆட்சி காவல் துறையை விட்டு, இப்படியெல்லாம் எதிர்க்கட்சிகள் மீது நடவடிக்கை எடுத்தால், அச்சுறுத்தினால் எப்படிப் பண்ணுவது? இதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டாமா? இன்னொன்று, கடைசியாக, ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்து விடுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: உரையை முடித்து விடுகிறேன். ஒரு நிமிடத்திலே உரையை முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்து விடுங்கள், முடித்து விடுங்கள். ஏற்கெனவே நீங்கள் கேட்டதற்கு மேல் அதிகமாக நேரம் கொடுத்தாகி விட்டது.

4. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

(ஆ) விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 9-4-2003 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 9-4-2003 அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

9-4-2003 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(9-4-2003)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-44* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

127. உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். *(2003-2004) (தமிழ், ஆங்கிலம்)*

128. பொதுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். *(2003-2004) (தமிழ், ஆங்கிலம்)*

129. பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். *(2003-2004) (தமிழ்)*

130. தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி - பண்பாடு மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். *(2003-2004) (தமிழ், ஆங்கிலம்)*

131. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். *(2003-2004) (தமிழ், ஆங்கிலம்)*